1972 பிப்ரவரி]

Ulundurpet—Salem road

* 243 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the contractors of the widening of roads of the Ulundurpet—Salem road between 74 to 86 K.M. have surrendered their contract during 1971 January;

(b) whether the surrender has been accepted; and

(c) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை இவ்வேலையை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தக்காரர் தேர்தலில் போட்டியிட்டதால் அவருடைய விருப்பப்படி அவர் ஒப்பந்தம் முடிக்கப்பட்டு, அவர் டிபாசிட் தொகையை இழந்தார், மறு ஒப் பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு அவ்வேலை வேறு ஒருவருக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : பல வேலைகளுக்கு போட்ட எஸ்டிமேட் குறைவாக இருப்பதால் வேலையில் காலதாமதம் ஏற்படுகிறது. வேலையில் காலதாமதம் ஏற்படாமலிருக்க வேலைக்கு ஏற்ற முறையில் எஸ்டிமேட் ரேட் நிர்ணயம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக் கும் இதற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. மூலக் கேள்வி ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தங்களைத் திரும்ப ஒப்படைத்து விட்டனரா என்பதுதான். அந்த ஒப்பந்தக்காரர் தேர்தலில் போட்டியிட்டதால் ஒப்பந்தம் ரத்துசெய்யப்பட்டது என்று பதில் சொல்லியிருக்கிறேன். மேற்கொண்டு விவரங்கள் இபபொழுது இல்லை.

செங்காளிபாளையம் பள்ளத்தின் குறுக்கே பாலம்.

* 244 வினு—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள சர்க்கார் சாமக்குளம் பிர்க்காவில், துடியலூர், கோவில்பாளையம் சாலையிலுள்ள செங் காளிபாளையம் பள்ளத்தில் பாலம் கட்ட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக நானே அரசாங்கத்திற்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். நேரடியாகவும் பேசியிருக்கிறேன். அரசாங்க அதிகாரிகள் கீழ்